Registered as a news paper

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 02 (05.04.2003) சனிக்கிழமை இதழ் :184

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-729)

## மகளிர் உபகுழுவுக்கு செயலகம்; நேற்றைய கூட்டத்தில் ஆராய்வு!

(கிளிநொச்சி)

மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுவின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் கிளிநொச்சியில் ஆரம்பமாகியது.

இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கென அரசதரப்புப் பிரதிநிதிகள், நேற்றுக்காலை 10.30 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

இவர்களை, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்தோர், பெண் போராளிகள் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்று, கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலக அலுவலகத்திற்கு அழைத்து வந்தனர். சமாதானச் செயலகத்தை வந்தடைந்த அரசதரப்புப் பிரதிநிதிகளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி கைலாகு கொடுத்து வரவேற்றார்.

இதன்போது, அரசதரப்புப் பிரதிநிதியான கலாநிதி குமாரி ஜெயவர்த்தன, நூல்கள் சிலவற்றை தமிழினியிடம் அன்பளிப்புச் செய்தார்.

காலை 11 மணியளவில் மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுவின் இரண்டாவது கூட்டம் ஆரம்பமானது.

இக்கூட்டத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் - அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி சுப்ரமணியம் தலைமையில் பிரமிளா சோமசுந்தரம், காயா சோமசுந்தரம், யாழிசை பாலசிங்கம், சுதாமதி சண்முகராஜா ஆகியோரும்,

(10ஆம் பக்கம் பார்க்க)



மகளிர் விவகார உபகுழுக்கூட்டம் நேற்று ஆரம்பமான போது - கலந்துரையாடும் அரசதரப்பும், புலிகள் தரப்பும்.

# தமிழருக்கு நீதியான தீர்வு; சர்வதேச அளவில் பிரசாரம்!

## மேற்கொள்ளப்போவதாக ஜோன் ஹியூம் அறிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் எதிர்பார்த்துநிற்கும் - தமிழ்மக்களுக்கான நியாயமான, நிம்மதியான அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்கும் - தென்னிலங்கையிலுள்ள அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து இவ்விடயத்தில் செயற்படவும் அழுத்தம் கொடுப்பதற்காக - தான், சர்வதேச அளவில் பிரசாரங்களை மேற்கொள்ளப்போவதாக - இலங்கை வந்திருக்கும் ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த சமாதானத்துக்கான நோபல் பரிசாளரான ஜோன் ஹியூம் அறிவித்திருக்கிறார்.**

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் தரப்பினரை நேற்றைய தினம் சந்தித்துப் பேசியதன் பின்னர் - கொழும்பில் நேற்றிரவு செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது - விடுதலைப் புலிகளுடனான சந்திப்பில், அவர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள பற்றுறுதியை அறிந்துகொள்ள முடிந்தது. தமிழ் மக்களுக்கு நீதியான, நிம்மதியான அரசியல் தீர்வொன்றை அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.



போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரித அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டும், தமிழ் மக்களின் எதிர்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்கள்!

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் இன்று முதல் 13 ஆம் திகதி ஞாயிறுவரையுள்ள - சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### விண்ணாணம் விநாசியர்



மதியில்லாம மிதிவெடிகளோட விளையாடக்கூடாது பார்!

## மிதிவெடிக்கு கல்லெறிந்ததில் பாடசாலைச் சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிக்குக் கல்லெறிந்து விளையாடிய பாடசாலைச் சிறுவன் படுகாயம் அடைந்துள்ளான்.

நேற்றுமாலை 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், கேரதீவு வீதி, நாவற்குழியைச் சேர்ந்த தங்கராசா கனோஜன்(வயது 12) எனும் நாவற்குழி மகாவித்தியாலய மாணவனே படுகாயமடைந்தவராவார்.

மேற்படி சிறுவன் பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது, மிதிவெடி அகற்றப்படுகின்ற பிரதேசத்தில் - மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அடையாளமிடப்பட்டிருந்த இடத்திற்குக் கல்லொன்றை எறிந்துள்ளான்.

அச்சமயம் மிதிவெடி வெடித்ததில் - உடல் முழுவதும் காயமடைந்த நிலையில் இச்சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறான். (ரா,சு)

## ரி.வி. திருத்த முயன்றவர் மின் தாக்கியதில் மரணம்

வடமராட்சி, பொற்பதிப் பகுதியில் கிராமசேவையாளர் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளார்.

ஐயாத்துரை முருகானந்தம் (வயது 41) என்ற பொற்பதிப் பகுதி கிராம சேவையாளரே இவ்வாறு மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இவர் பழுதடைந்த தனது தொலைக்காட்சிப் பெட்டியைத் திருத்த முற்பட்டபோதே, மின்சாரம் தாக்கிப் பலியானார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். (17,9)



புக்தாத் சர்வதேச விமானநிலையம் மீது அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலில் சேதமடைந்த விமானத்தின் பகுதிகளைப் படத்தில் காணலாம்.

## வொஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்காத அமெரிக்காவின் நடவடிக்கைக்கு விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம்

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் புனர்நிர்மாண, மீள்கட்டமைப்பு நடவடிக்கையில் இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இணைந்து பங்காற்றுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் - அமெரிக்காவுக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளுக்கும் அறிக்கை ஒன்றின் மூலம் அழைப்பு விடுத்துள்ளனர். இந்த அறிக்கை நேற்று கிளிநொச்சி அரசியற் தலைமையகத்தால் விடுக்கப்பட்டது.

எதிர்வரும் 14ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள உதவி

(10ஆம் .பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-730)

## நாடக ஆற்றுகையூடான மிதிவெடி விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கான இணைப்பாளர் தேவை

பின்வரும் தகுதிகளுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ நாடகத் துறைசார்ந்த அனுபவம்
- ★ ஆங்கிலத்தில் எழுதும், சரளமாக பேசும் திறன்.
- ★ கணனி அறிவு.
- ★ மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கான அனுமதிப் பத்திரம்.

மாதாந்த வேதனம் :- 6000/-
வயதெல்லை :- 20 - 30
விண்ணப்ப முடிவுதிகதி :- 10.04.2003

விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடம்/அனுப்பவேண்டிய முகவரி:-

*தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,*
*106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*

*தலைவர்,*
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.*

(சி-760)



## யாழ்ப்பாண மாநகரசபை

### சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கேற்ற வீடு தேவை

மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமாக செயற்படுவதற்கு நல்லூர் மற்றும் சுண்டிக்குளிப் பகுதிகளில் 06 அறைகளுக்குக் குறையாததும் குடிநீர் மற்றும் மலகூட வசதிகளைக் கொண்டதும், நல்ல நிலையிலுள்ளதுமான சாதாரண அல்லது மாடிவீடு ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது.

மேற்குறித்த அறைகள் மற்றும் வசதிகளைக் கொண்ட வீட்டினை மாநகர சபைக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர் - தமது வீட்டின் விஸ்தீரணம், அறைகளின் எண்ணிக்கை மற்றும் அமைவிடம், உரிமையாளரின் பெயர் போன்ற விபரங்களுடன் எதிர்வரும் 16.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும் வாட கையே மாதாந்தம் சபையினால் செலுத்தப்படும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
02.04.2003

(சி/761)

(இ.இராமலிங்கம்)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



## GTZ - Jaffna Rehabilitation Project

We wish to inform the General public, partner Organisations both in the Government and Private Sectors, Beneficiaries and relevant authorities that our office has been moved to a new premises with effect from 12th March 2003.

Our new office is at No, 472, Main Street, Jaffna.
Telephone No : 021 - 222 2635
021 - 222 6011 FAX : 021 - 2222238

March 28, 2003 Field Team Leader GTZ - JRP 472, Main Street, Jaffna

## ஜீ.ரி.சற் - யாழ் புனர்நிர்மாண திட்டம்

பொதுமக்களுக்கும் எம்முடன் சேர்ந்து பணியாற்றும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஏனைய சார்புடைய அலுவலர்கள் பயனாளிகள் சகலருக்கும் எமது நிறுவனத்தின் யாழ். அலுவலகம் புதிய விலாசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

எமது புதிய அலுவலக விலாசம் : 472, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல : 021 - 222 2635
021 - 222 6011
தொலை நகல் 021 - 2222238

வெளிக்கள குழுத்தலைவர்
ஜீ.ரி.சற் - யாழ். புனர்நிர்மாண திட்டம்
28.03.2003

*472, பிரதான வீதி*
*யாழ்ப்பாணம்.*

(சி-758)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



## அமரர் நாகப்பர் சின்னத்தம்பி

06.03.2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியமும், மதியபோசனமும் 05.04.2003 சனிக்கிழமையன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவு கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் தந்தி, தபால் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

*புலவரோடை,*
*வதிரி, கரவெட்டி வடக்கு.* (சி756)


# வடமராட்சி மீனவர்கள் மீது இந்திய மீனவர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களிடமிருந்த மீன்பிடி உபகரணங்கள், ஒருதொகை மீன் என்பன இந்திய மீனவர்களால் அபகரிக்கப் பட்டுள்ளன.

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களை - கத்தி, பொல்லு என்பவற்றைக் கொண்டு மிரட்டிய இந்திய மீனவர்கள், அவர்களிடமிருந்த மீன்பிடி வலை மற்றும் மீன்கள் என்பவற்றைப் பறிமுதல் செய்ததோடு மீனவர்களையும் தாக்கியிருக்கிறார்கள். இது தொடர்பாக வடமராட்சி கடற்புலிகள் அலுவலகத்தில் மீனவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச,சு)

## ஆங்கில வட்ட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நாளை மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை யாழ். ஆங்கில கல்வி வட்டத்தின் மாதாந்தக் கருத்தரங்கில் - 'கவிஞன் பேசும் காலச்சூழல்' என்ற பொருள்பற்றி சடாதரன் உரையாற்றுவார். சிறுவர் வேலைக்கமர்த்தல் குறித்து மதிச்செல்வி அருள்குமார் கருத்துரை வழங்குவார்.


## சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

10″, 12″, 14″, 16″ சைனா மெஷின்கள் (China Machine) வெல்டிங் பிளான்ட், றில்லர்கள், ஜெனரேட்டர்கள் ஏனைய எலெக்ரிக் சாமான்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- கி.சுதாகரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பணம். (சி-750)

### பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் உடனுக்குடன் Inter net மூலம் பெற்றுக்கொடுக்கப்படும். தொடர்பு:- பரதன் மல்ரிபிள் சேர்விஸ், 110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடைச் சந்தியடி).

T.P.- 222 5220, 222 5692. (303)

### THE ROYAL COLLEGE OF JAFFNA

SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S ROAD.
JAFFNA.
(சி-757)

### ராஜா யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த

**ரோஜாக்கூட்டம்**

10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும்
(சி-732)

### திறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 பு.நே.)
விஜய்,ரீமா சென் நடித்த

**பகவதி**

வெள்ளி, சனி, மட்டும் 8.45 (பு.நே.) இற்கு
**HOLLOW MAN**
10.04.2003 முதல் Jurassic Park-3
(சி-731)


## இன்றைய நாள் இனிய நாள்

**05-04-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பொருள் வரவு, குடும்பத்தில் அமைதி, தொழில் முன்னேற்றம், வீடு வாகன லாபம். |
| இடபம் | :- தேக சுகம் பாதிக்கப்படும், பொருள் வரவு, பிரயாணக் கஷ்டம், நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | :- குடும்ப மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், பொருளாதார நிலை நன்று, |
| கர்க்கடகம் | :- பிரயாணக் கஷ்டம், உஷ்ண ரோகம், நேத்திர ரோகம், தொழில் சிறப்பு. |
| சிங்கம் | :- ஆரோக்கியம் குறைவு, பொருள் வரவு, தொழிலில் சமபலன், |
| கன்னி | :- தேக சுகம் பாதிக்கப்படும், சுபகாரியம் கைகூடும், தொழிலில் நல்ல முன்னேற்றம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகம் பாதிப்பு, தொழில் கஷ்டம், மனப்பயம், வீண் பிரயாசை. |
| விருச்சிகம் | :- தொழில் சிறப்பு, பணவரவுண்டு, பிரயாணத்தால் நன்மை, வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். |
| தனு | :- பொருள் வரவு, பொருளாதார நிலைமை சமம், குடும்ப சுகம். |
| மகரம் | :- தொழில் முன்னேற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுபகாரியம் கைகூடும். |
| கும்பம் | :- தொழிலில் போட்டி, மன அமைதி பாதிக்கப்படும், தேக சுகம் பாதிக்கப்படும், |
| மீனம் | :- தொழிலில் சமபலன், பொருளாதார கஷ்டம், வாகன சுகம். பிரயாண நன்மை. |


## இனிய புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி

**25-03-2003 -14-.04-2003 வரையுமே**

ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் புதுவருடத்தை முன்னிட்டு திறந்திருக்கும்.

உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகலவிதமான ஆடைகளையும் குறைந்த விலையில் பெற

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P NO:- 021-2222381 (சி/759)



கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka

Institute of Informatics Studies

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Elephant house
Necto

அனுசரணையில்

## நமது ஈழநாடு நடாத்தும்

## க.பொ.த (உயர்தரம்) 2003

வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு

ஆசிரியர் குழாம்

வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்

காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

# குருநகர் ஐஸ் தொழிற்சாலை திறக்காவிட்டால் போராட்டம்!

## பாதுகாப்பு அமைச்சுக்கு கடற்தொழிலாளர் அறிவிப்பு

(வடமராட்சி)

யாழ்.குருநகர் பகுதியிலுள்ள ஐஸ் தொழிற்சாலை புனரமைப்பதற்குப் படையினர் தடைவிதித்த விவகாரம் - பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொழிற்சாலையைப் புனரமைப்பதற்கான பணிகளைத் தொடர அமைச்சு அனுமதிக்காதுவிட்டால், எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்குவதற்குக் கடற்தொழிலாளர் சமூகம் தயாராகி வருவதாகத் தெரியவருகின்றது.

கடற்தொழிலாளர்கள் - ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, பெருமளவான கடலுணவுப் பொருட்கள் பிடிக்கப்பட்டுவருகின்ற போதிலும் - அவற்றைப் பாதுகாப்பதற்குக் குளிரூட்டும் வசதிகள் இன்மையால் மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் - புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சின் விசேட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட - சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் ஐஸ் தொழிற்சாலை புனரமைக்கப்பட்டு வந்தது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று குருநகர் - முதலாம் குறுக்குத் தெருவில் இருந்த ஐஸ் தொழிற்சாலையின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை - திடீரெனப் படையினர் - தொழிற்சாலை இராணுவ பாதுகாப்பு வலயத்தினுள் அமைக்கப்பட்டு வருவதால், புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறு - வடமாகாணக் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு அறிவித்திருந்தது.

இவ்வாறு படையினர் தடைவிதித்த விவகாரம் தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேநதிரகுமாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இது தொடர்பாகக் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குக் கஜேந்திரகுமார் நடவடிக்கை எடுத்து வருகின்றார். (ச)

### போராளி மீதான தாக்குதல் குறித்த

# விசாரணையில் பங்குபற்ற இருதரப்புக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் - கச்சாய் வீதியில், அண்மையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்- பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு, வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதிக்கும், கொடிகாமப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் - மனித உரிமை ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

கொடிகாமம் - கச்சாய் வீதியில் கடந்த புதன்கிழமை காலை, அரசியற்பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினரான இசைவாணன் - பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் - மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இம்முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு எதிர்வரும் திங்கட்கிழமை வருகை தருமாறு மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரி றொகான் சந்திர சேகரவினால் - இளம்பரிதிக்கும், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் நேற்றுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (லி)



தலைமன்னார் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் சுவிஸ் நாட்டு கண்ணிவெடி அகற்றும் அமைப்புடன் பணியாற்றிவரும் - மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரைப் படங்களில் காணலாம். இவர்களால் இப்பகுதிகளில் இருந்து பெருந்தொகையான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு; கிணறுகளிலும் நீர் வற்றுகிறது!

நெடுந்தீவுப் பிரதேசத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசசபையினால் நீர்ப்பம்பிகள் மூலம் நீர்த்தொட்டிகளில், நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும், தற்போது கடுங்கோடை காலம் என்பதால், இப்பகுதிகளில் உள்ள நன்னீர்க் கிணறுகளில் நீர் குறைந்து காணப்படுகின்றது. இதனால் குடிநீரிற்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவுப் பகுதியில் நிலைகொண்டு இருக்கின்ற கடற்படையினர், பொலிஸார் தமக்குப் பாவனைக்கெனப் பெருமளவு நீரைப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகளின் நன்மை கருதி கட்டப்பட்டிருந்த கேணிகளில், கோடை வெயிலில் நீர் வற்றி காணப்படுகின்றது.

இதனால் ஆடு, மாடுகள் நீரின்றி தினமும் இறந்து வருகின்றன. கால்நடைகள் முற்றாக அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் நெடுந்தீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.(34)

# கடல் போக்குவரத்துக்கான விதி புதிய திருத்தங்களுடன் அமுலாகும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கை அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல் போக்குவரத்து நடைமுறைகள் பற்றி தெளிவில்லாத தன்மை இருப்பதனால், இவ்விடயங்களை உள்ளடக்கிப் புதிய திருத்தங்களைப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கொண்டுவருவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன எனப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நெடுந்தீவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

இந்த வகையில், கடந்தமுறை ஜப்பானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, விடுதலைப் புலிகளுடன் சில இணக்கப்பாடுகளை அரசாங்கம் எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (01)



ஏறத்தாழ 350 வருடங்களாக நடைபெறாமலிருந்த திருகோணமலை கோணேசராலய தேருற்சவம் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது. 1624 இல் போர்த்துக்கேயரால் இத்திருத்தலத்தின் தேர்கள் அழிக்கப்பட்டதன் பின்னர் - தற்போதே தேர் உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தேரானது 'இராவணன் வெட்டு' பகுதிக் கண்மையில் வந்துகொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## தடகள விளையாட்டு விழா

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா - நாளை பி.ப 2.30 மணிக்கு நெல்லியடி ம.ம. வித்தியாலய விளையாட்டு அரங்கில் - கரவெட்டி பிரதேசசெயலர் க.கனகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராகப் பருத்தித்தறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி ம.ம.விததியாலய அதிபர் எஸ்.சேதுராஜாவும், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

## உயர்தர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இரண்டு நாட்களுக்குக் கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை 9 மணிமுதலும் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது,

இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பிரபல ஆசிரியர்கள் கலந்துகொள்வார்கள். பங்கேற்க விரும்பும் மாணவர்கள் முன்கூட்டியே கல்லூரியில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (17)

### முக்கியத்துவம் மிக்க விடயங்களில்

# எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ள அரசு முயற்சி

(கொழும்பு)

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரிவான திட்டமொன்றைப் பிரேரித்திருக்கிறார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் நடைமுறையிலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை உறுதி செய்வதே இதன் நோக்கமென பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்குப் பிரதமர்,- எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க இருப்பதாகவும் அவர் சொன்னார்.

இந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்கு ஆளும் கட்சியில் ஆறு பேரும், எதிர்க்கட்சியில் ஐந்து பேருமாகப் பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும்.

இந்த யோசனைகள் குறித்து பிரதமர் - சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

# தனிக்குழுவாக அனுமதியுங்கள்; அதாவுல்லா அணி வலியுறுத்து!

## ரணிலை மீண்டும் சந்திக்க முடிவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் தலைமைத்துவத்தை ஏற்காது பிரிந்து சென்ற - அதாவுல்லா அணியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் சந்திக்கவுள்ளனர்.

தம்மைத் தனியான அணியாகச் செயற்படுவதற்கு அங்கீகாரம் வழங்குமாறு கோரியே இந்தச் சந்திப்பு நடைபெறவிருக்கிறது.

எம்.எல்.எம்.அதாவுல்லா, நூர்தீன் மசூர், மொஹீதீன் அப்துல் காதர், ஏ.எல்.எம்.ஹவ்ரத், எம்.பி.அசீஸ் ஆகியோரே - பிரதமரைச் சந்தித்து, தாம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்ற விரும்பவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்தவுள்ளனர்.

### தலைமன்னார் கடலில் மீன்பிடிக்க

# அனுமதி பெற்றே செல்லுமாறு மீனவருக்கு கடற்படை உத்தரவு

(மன்னார்)

தலைமன்னார் கடலில் நேற்றுக் காலை மீன்பிடிக்கச்சென்ற கடற்தொழிலாளர்களிடம், அனுமதி அட்டை பெற்று மீன்பிடியில் ஈடுபடும்படி கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தில் அனுமதி அட்டை பெற்றுக் கடறதொழிலுக்குச் செல்லும் நடைமுறை தளர்த்தப்பட்டிருந்த போதிலும், நேற்றுமுன்தினம் கடற்படையினரால் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டை பெற்று கடலுக்குச்செல்லும் நடைமுறைகளைத் தாங்கள் ஏற்கப்போவதில்லை என்றும், இதற்கான நடவடிக்கைகளைக் கடற்தொழிலாளர் சங்கம் மூலம் எடுக்கப்போவதாகவும் கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

பத்தாவது அகவையில்

பெயர் : யோ.பிரஷாந்
முகவரி: அசோக் இல்லம்,
கட்டைப்பிராய்.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# மாணவர் ஆங்கிலக் கல்வியில் அதிக கவனமெடுக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. ஆலோசனை

மாணவர்கள் பல்வேறுதுறைகளிலும் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். மாணவர்களின் ஆற்றல் அறிவுகளை மேம்படுத்துவதற்கு, ஆங்கிலக்கல்வி முக்கிய பங்கினை வகிக்கிறது ஆகவே, ஆங்கில கல்வியில் அதிக கவனமெடுக்க வேண்டும்.

- இவ்வாறு குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் ரீ.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - கஜேந்திரகுமார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது - மாணவர்கள் கல்வியுடன், விளையாட்டிலும் முன்னணியில் திகழவேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும். கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியிலும், கல்வி மேம்பாட்டு நடவடிக்கையிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு வகையான வசதிக் குறைகள் காணப்படுகின்றன. இந்த வசதிக்குறைகள் நீக்கப்பட வேண்டும். வசதிகுறைவான பிரதேசமாக இருக்கின்றபோதிலும், இவ்விளையாட்டுப் போட்டிகள் மிகச் சிறப்பாக நடாத்தப்படுவது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும் என்றார்.

வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம், ஆர்.ஈ.ஆனந்தராசா, கோட்டக்கல்வி உதவிப் பணிப்பாளர் பி.இரகுநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்குக் கஜேந்திரகுமார் பரிசில்களை வழங்கினார். (17)

### கிளிநொச்சி மாவட்ட

# தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஆளணிப் பற்றாக்குறை தீவிரம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இயங்கும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகின்றது.

தற்போது கிளிநொச்சியில் தென்னை ஆராய்ச்சி நிலையம் இயங்கத் தொடங்கியுள்ளதால் - ஆராய்ச்சி நிலையத்தில் ஆளணிப் பற்றாக்குறை தீவிரமடைந்துள்ளது.

கடந்தகாலங்களில் யுத்தம் நிலவியதால், பெருமளவிலான இளந் தென்னைகள் அழிக்கப்பட்டு விட்டன. அவ்வளத்தை மீளக் குறுகிய காலத்தில் கட்டியெழுப்பவேண்டுமென்றால் - மாவட்ட, பிராந்திய ரீதியாகக் காரியாலயங்கள் நிறுவ வேண்டியுள்ளது என்றும், இவ்வளத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு ஆளணிப் பற்றாக்குறை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுகின்றது. (108)

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணமும், பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### பரீட்சை எழுதுவோருக்கு அருளாசி வைபவம்

இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அனுமதியட்டை ஆசிகூறி வழங்கும் வைபவம் யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மதகுருமார், பெற்றோர், ஆசிரியர்களின் அருளாசி வேண்டி நடைபெறும் இந்நிகழ்வில், இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் க.இராசதுரை அழைத்துள்ளார்.

மாணவர்கள் தமது அனுமதியட்டையைப் பூர்த்தியாக்க, அடையாள அட்டை சகிதம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- இரண்டாந்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு, இவ்வைபவத்துக்கான அழைப்பு விடுக்கப்படவில்லையென அதிபர் தெரிவித்துள்ளார். (சு)

# பணிநிலை வேண்டுகை

சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:- ஆயப்பகுதி, நடுவப் பணியகம், கிளிநொச்சி காலம் :-12.04.2003, மு.ப 10.00 மணி**

## பணிநிலை

| | | | |
|---|---|---|---|
| 01) ஆய அலுவலர் | (இருபாலாரும்) | 05) சமையலாளர் | (ஆண்கள்) |
| 02) ஆய உதவியாளர் | (ஆண்கள்) | 06) சமையல் உதவியாளர் | (ஆண்கள்) |
| 03) எழுதுநர் | (ஆண்கள்) | 07) பாதுகாப்புப் பணியாளர் | (ஆண்கள்) |
| 04) தட்டெழுத்தாளர் | (ஆண்கள்) | 08) மொழிபெயர்ப்பாளர் | (ஆண்கள்) |

## கல்வித் தகைமை

பணிநிலை 01,03 இற்கு க.பொ.த(உ/த) சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 02 இற்கு க.பொ.த(சா/த) கற்றிருத்தல்.
பணிநிலை 04 இற்கு க.பொ.த(சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.
பணிநிலை 05 இற்கு உணவுவகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
பணிநிலை 06 இற்கு 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும், நன்னடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர். எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

## சிறப்புச் சலுகை

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்துதரப்படும்.

# ஆயம், நிதித்துறை, தமிழீழம்

(சி-744)

# வார்த்தை விளையாட்டு - 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | | | | 2 | |
| 3 | | 4 | | லா | |
| | | ஞ் | 5 | | |
| 6 | 7 | 8 | | | |
| ளி | | | | 9 டை | |
| 10 | | | | 11 | |

முழுப் பெயர் : ..................................

கற்கும் பாடசாலை : ..................................

கற்கும் தரம் : ..................................

முகவரி : ..................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்



1. ஈராக் மீது தாக்குதல் நடாத்தும் நாடு.
3. கையூட்டு
5. வைப்பு என்பதற்கு எதிர்ப்பதம்.
6. ஒரு தமிழ் மாதம்.
8. அண்மை
10. சட்டப்படி பிடித்தல் என்றும் செல்லலாம்.
11. அரசு வருமானம் பெற அறவிடுவது.



## மேலிருந்து கீழ்

1. இலங்கைப் பிரதமரின் உத்தியோகபூர்வ மாளிகை
2. நால்வகைப் படைகளுள் ஒன்று
4. கலக்கம்
7. பெரிதுக்கு எதிர்
9. காகத்திடம் நரி ஏமாற்றிப் பறித்த உணவுப் பொருள் (தலை கீழாக)

## வார்த்தை விளையாட்டு - 26 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. கல்யாணம்
3. பத்திரிகை
5. திவசம்
6. மரை
7. பனி
8. அம்மி
9. மதியம்.

**மேலிருந்து கீழ்**

1. கங்காரு
2. யாத்திரை
4. ரிசபம்
6. மந்தி
10. உமி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 09-04-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 26

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
செ.சித்திராங்கி
"தனாலயா" சமரபாகு,
வல்வெட்டித்துறை.

*2 ஆம் பரிசு -*
கு.அனுசாந்தி
217, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

*3 ஆம் பரிசு -*
வி.கனிகை
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

# செடியும் மரமும்

ஒரு பெரிய பணக்காரர் தன் மகனுடைய கெட்ட குணங்களை மாற்றி, நல்ல பழக்கமுள்ள ஒருவனாக மாற்றிட வேண்டும் என்று ஒரு அறிவாளியை அணுகிக் கேட்டுக் கொண்டார். அறிவாளி-



தனவானுடைய மகனை அழைத்துக் கொண்டு ஒரு தோட்டத்திற்குள் சென்றார். அங்கு ஓரிடத்தில் அவனை நிறுத்தி, ஒரு சிறிய செடியை வேருடன் எடுக்கச் சொன்னார். சுலபமாக அவன் செடியை எடுத்து விட்டான். அதன் பிறகு ஒரு பெரிய செடியை அவர் எடுத்துவிடச் சொன்னார். பையனும் கொஞ்சம் கஷ்டத்துடன் அந்தப் பெரிய செடியைப் பிடுங்கினான். பிறகு அடர்த்தியாயிருந்த செடி ஒன்றைப் பிடுங்கிவிடக் கூறினார். பையன் தன் பலத்தையெல்லாம் உபயோகித்து அந்தச் செடியையும் எடுத்து விட்டான். பிறகு, அறிவாளி அவனிடம் ஒரு கொய்யாமரத்தைக் காட்டி, அதை எடுத்து வருமாறு கூறினார். தனவானின் பையன் மரத்தின் அடிப்பாகத்தைப் பிடித்துப் பலமுறை முயன்றும் முடியாததால், 'இது மிகக் கடினமான காரியம். என்னால் முடியவில்லை' என்றான். அதற்கு அறிவாளி இதே போல்தான் கெட்ட பழக்க வழக்கங்களும். அவைகள் சிறியதாக இருக்கும்போது அவற்றை நீக்கிவிடுவது சுலபம். ஆனால், அவற்றை மரம்போல் வளர விட்டால், அவற்றை நீக்குவது மிகக்கடினமான செயலாகும் என்றார். அன்றிலிருந்து அந்தத் தனவானின் பையன் மாறிவிட்டான்.



## பாதுகாப்பான இல்லம்

நன்றி - ரிங்கிள்

ஜோன், ஜெனி, ஜிம்பா ஆகிய மூன்று சிறிய பொன் மீன்கள் ஒரு அழகான மீன் தொட்டியில் தங்களது பெற்றோருடன் வாழ்ந்துவருகின்றன.













ஜிம்மியின் சொல்லுக்கோளாத குணம், அவனுடைய சகோதரர்களுக்கும் பரவுகிறது.



# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ம.கிரிசன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டுத் துறை.



முழுப்பெயர் :-
சு.மயூரிகா
கற்கும் பாடசாலை :-
இளவாலை மெய்கண்டான் வித் தியாலயம.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
இசை, கவிதை வாசித்தல், விளையாட்டு.



முழுப்பெயர் :-
கி.பரந்தகன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :
விளையாட்டுத்துறை, கதை கேட்டல்.



முழுப்பெயர் :-
ஸ்ரீ.சித்பரன்
கற்கும் பாடசாலை :-
மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டு, கதை சொல்லுதல், கணிதம்.

முழுப்பெயர்:- கு.ரேணுகா
கற்கும் பாடசாலை :-
இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பாடல், நடனம், விளையாட்டு.

முழுப்பெயர்:- சி.மதீசன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.கைதடி குருசாமி வித்தியாலம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கணிதம், தமிழ், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- ப.கிறிஸ்ரியன் மரியகுருஸ்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
அறிவுள்ள நூல்களை வாசித்தல், பேனாநட்பு.

முழுப்பெயர்:- சு.சுரேந்திரன்
கற்கும் பாடசாலை :-
கிளி/பளை மத்திய கல்லரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.

# உலக அதிசயங்கள்

புராதன காலத்தின் ஏழு அதிசயங்கள் அலெக்சாண்டரின் காலத்தில் வகைப்படுத்தப்பட்டன. சிடோவின் ஆன்டிபட்டர் என்பவர்தான் ஏழு அதிசயங்கள் பற்றிய பட்டியலை முதன் முதலில் உருவாக்கியவராவார். அவரால் குறிப்பிடப்பட்ட ஏழு அதிசயங்கள் பற்றிப்பார்ப்போமா

## எகிப்திய பிரமிட்



இது எகிப்தில் நைல் நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. 12 ஏக்கர் பரப்பளவில் இந்தப் பிரமிட் அமைக்கப் பட்டிருக்கிறது. கி.மு. 2690 ஆம் ஆண்டில் இது கட்டப்பட்டது. இந்தப் பிரமிட்டைக் கட்டுவதற்கான இடத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே பத்து வருடங்கள் சென்றதாம்.

சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் 20 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்து, மன்னரின் கல்லறைப் (Tomb) பணியை முடித்தனர். இந்தக் கல்லறையின் உயரம் 481 அடி. மன்னரின் சடலம் பழுதடைந்து போகாமல் இருப்பதற்காகப் பல்வேறு வகையான மூலிகைத் தைலங்கள் சடலத்தில் பூசப்பட்டு பிரமிட்டின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரமிட்டில் இடிபாடுகள் ஏற்பட்டபோதிலும் இன்றும் நிலைத்து நிற்கிறது. பழைமையின் பெருமையை விளக்கும் முக்கிய சின்னம் இது.

## சிங்க மனிதனின் சிலை

**(SPHINEX OF GIZEH)**



சிங்கத்தின் உடலும் மனிதனுடைய தலையும் கொண்ட கல்லாலான இந்தச் சிலையின் நீளம் 172.5 அடி. உயரம் 66 அடி. கி.மு 3750 இல் இது உருவாக்கப்பட்டது.

(அடுத்தவாரம் தொடரும்)

# உங்கள் கைவண்ணம்




## ...தேடிவரும்...

பூக்களைத் தேடிவரும் தேனி போல்
சீனியைத் தேடிவரும் எறும்பு போல்
இரை தேடிவரும் பருந்து போல்
மீனைத் தேடிவரும் கொக்கு போல்
அன்பைத் தேடிவரும் குழந்தை போல்
நல்ல நூல்களை தேடிக் கற்கவேணடும்.

யோகராஜன்-டினேஷாந்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
தரம்-10.



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

'நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# விடுகதைகளும்

1. உயர்ந்த கொப்பிலே மலர்ந்த பூ. அது என்ன?
2. வாய் இல்லாப் பறவை ஊரெல்லாம் பறக்கும். அது என்ன?
3. அடிக்க அடிக்கக் கத்தும் குழை போட்டால் தின்னாது. அது என்ன?
4. விசில் அடித்தால் மலைப்பாம்பு நகரும். அது என்ன?
5. இட்டு முட்டுக்குள் ஒரு தட்டுப்பலகை. அது என்ன?
6. கொக்கு நிற்கக் குளம் வற்றும். அது என்ன?
7. கட்டையன் கட்டையன் கறுவல் கட்டையன் கண்டவர்க்கெல்லாம் உருண்டைக்கட்டையன் ஊருக்கெலலாம் உறைச்ச கட்டை. அது என்ன?
8. எள்ளிலும் சிறிய இலை என்ன இலை?
9. கூனக் கிழவிக்கு வயிறு நிறையப் பல். அது என்ன?
10. கழுத்தை அறுக்கக் கண் வரும். அது என்ன?

# விடைகளும்

1. குடை
2. விமானம்
3. மத்தளம்
4. புகையிரதம்
5. நாக்கு
6. விளக்கு
7. மிளகு
8. விடத்தல் இலை
9. அரிவாள்
10. நொங்கு



சி.யூட் விநோதன்
பொற்பதி,
குடத்தனை.

# சமாதானம்

சமாதானமே எங்கள் சமாதானமே
சமரசமே எமக்கு அரணாகுமே
சண்டை வேண்டாமே இனி
சண்டை வேண்டாமே.

சண்டையிலே அழிந்தவர்கள் எத்தனை பேரோ
முடமாகிப் போனவர்கள் எத்தனை பேரோ
அண்டை அயல் அழிந்தவர்தான்
எத்தனை பேரோ

என்றைக்குமே நன்மை தரும் சமாதானமே
தானங்களிற் சிறந்ததும் சமாதானமே
தேசங்களிற் சிறந்ததும் சமாதானமே
பாசங்களை வளர்ப்பதும் சமாதானமே
சஞ்சலங்கள் தீர்ப்பதும் சமாதானமே.

ஆக்கம:
இ.சுகர்னியா
தரம் - 5
யா/தந்தை செல்வா தொடக்க
நிலைப்பள்ளி, தெல்லிப்பழை

# நாடுகளும் அவற்றின் நாணயங்களும்

| | |
|---|---|
| 1. அமெரிக்கா:~ | டொலர் |
| 2. நைஜீரியா:~ | கோபோ |
| 3. ஸ்கொட்லாந்து:~ | பௌன்ஸ் |
| 4. சவுதி அரேபியா:~ | றியால் |
| 5. பிறேசில்:~ | குருசிறியஸ் |
| 6. கனடா:~ | கனடியன் டொலர் |
| 7. பிலிப்பைன்ஸ்:~ | பீஸோ |
| 8. பிரான்ஸ்:~ | பிராங் |
| 9. அவுஸ்திரேலியா:~ | டொலர் |
| 10. வெனிசுலா:~ | பொலிஹல் |

ஆர்.தேனுகா,
தரம் ~ 10, சுண்டிக்குளி, மகளிர் கல்லூரி.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................................
கற்கும் பாடசாலை :.................................................
கற்கும் தரம் :.................................................
வீட்டு முகவரி :.................................................
பிறந்த திகதி :.................................................
ஆர்வமுள்ள துறைகள் :.................................................
:.................................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தொடரும் பணி!

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் - 'த ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியொன்றில் - அவர் எவரெவருக்காகக் கவலைப்படுகின்றார் என்பதைத் தெட்டத்தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

பிறப்பால் அவர் தமிழரென அடையாளப்படுத்தப்பட்டாலும் - அவரது செயற்பாடுகள் சிங்கள அரசாங்கமொன்றின் மிக முக்கியமான தளபதிக்குரிய அந்தஸ்தை அவருக்குக் கொடுத்திருக்கின்றன.

எந்த நோக்கத்துக்காக அவர் நேரடி அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டாரோ - அந்த 'நன்றிக்கடனை' இன்றைக்கும் தீர்த்துவைப்பவராக அவர் மாறிவிட்டார்.

பௌத்த சிங்களப் பேரினவாதி ஒருவரால் சாதிக்க முடியாதவற்றைக் கூட - கதிர்காமர் சர்வதேச அரங்கில் சிங்கள அரசாங்கத்துக்காக, ஜனாதிபதி சந்திரிகாவுக்காக சாதித்துக் கொடுத்திருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினையைத் திரிபுபடுத்தி, விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதக் குழுவாக்கி' அவர் செய்த மாயா ஜாலங்கள் - சர்வதேச அரங்கில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு திட்டமிட்ட ரீதியில் பெரும் பாதிப்பை விளைவிப்பனவாக இருந்தன. தமிழ்மொழியை ஒழுங்காகப் பேச முடியாதவர் - தன்னைத் தமிழனாக அடையாளப்படுத்தி, மிகப்பெருந் துரோகத்தைத் தமிழினத்திற்காற்றியதை இலகுவில் மறந்துவிடவும் முடியாது.

வெளிவிவகார அமைச்சராகத்தான் கதிர்காமர் - தனது குழிபறிப்புக்களையும், திரிபுபடுத்தல்களையும் மேற்கொண்டாரென்றால் - இன்று பதவியில் இல்லாதபோதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகர் என்ற ரீதியிலும் அவரது செயற்பாடுகள் முன்னைக்குக் குறைவில்லாதே மேற்கொள்ளப்படுகின்றன.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியுடன் - சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு, சர்வதேசம், இலங்கை இனப்பிரச்சினையை நியாயபூர்வமாக நோக்கத் தொடங்கியதும் - இனி அங்கெல்லாம் தனது 'வேலைகள்' செல்லுபடியாகாது என அறிந்துகொண்டு- புதுடெல்கியையும், சென்னையையும் மையமாக வைத்து அரசியல் நகர்வை கதிர்காமர் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்.

இலங்கையில் பெரும் இரத்தக்களரியை உருவாக்கிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு - தமிழ்மக்களுக்கு கௌரவமான, நீதியான தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி அதிகாரம்கொண்ட இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும்போது -

இலங்கையில் கூட்டாட்சி ஒன்று ஏற்படுத்தப்படுமாயின், அது - அடிப்படையில் இரண்டு நாடுகளையே குறிக்கும். இந்தியா அதனை அனுமதிக்காது. அது இந்தியாவுக்குப் பெரும் பாதிப்பையே கொடுக்கும் என - 'த ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் கதிர்காமர் கவலைப்பட்டிருக்கிறார்.

இதுவரை - இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி இந்தியத்தலைவர்கள் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்காது மௌனம் சாதிக்கும்போது- இந்தியாவின் குரலாகத் தன்னை ஒலிக்கவிட்டிருக்கிறார் லக்ஷ்மன் கதிர்காமர்.

இலங்கைத் தமிழர்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிடைத்து - இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்பட வேண்டுமென்பதிலும் பார்க்க - இந்தியாவின் நலனை முன்னிறுத்த முயலும் - கதிர்காமரின் வேடத்தை அம்பலப்படுத்த அவரது இக்கருத்தே போதுமானதாகும்.

அதேவேளை - மேற்கு நாடுகள் மீதான காழ்ப்புணர்ச்சியையும் அவர் அப்பேட்டியில் வெளிக்காட்டியிருக்கிறார்.

மேற்கு நாடுகள் இன்று வரலாம், நாளை போகலாம் ஆனால் இந்தியா அப்படிச் செய்துவிடமுடியாது என அவர் கூறுகின்றார்.

இந்தியாவுக்காகக் குரல் கொடுக்கும் கதிர்காமர் - மறுபுறம் தனது முன்னைய பணிகளையும் மறக்கவில்லை.

பல ஆண்டுகளாக, தமது சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்டு - எப்போது எமது மண்ணுக்குத்-திரும்புவோம் என அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாடிக்கொண்டிருக்கும் தமிழ்மக்களிருக்க,

உயர்பாதுகாப்பு வலயங்களென தமிழர் நிலங்களை கையகப்படுத்தியிருக்கும் படையினர் விலகப்போகின்றனரே என வருந்துகிறார் கதிர்காமர்.

வடக்கு - கிழக்கில் படையினர் பலமாக இருந்த - முக்கியமான சில தந்திரோபாயம்மிக்க இடங்களிலிருந்து விலகுமாறு அவர்கள் கேட்கப்படுகின்றனர். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்காக - படையினர் இவ்வாறு செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என 'அழுது புலம்பியிருக்கிறார்' கதிர்காமர்.

ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, ரில்வின் சில்வாவிற்கு நிகராக - ஏன், ஒருபடி அவர்களையும் விட மேலே சென்று- அப்பட்டமான குரோதத்தையும், யுத்த வழியையும் 'நாகரிகமாகச்' சொல்லியிருக்கிறார் அவர்.

இதுபோன்ற 'கதிர்காமர்கள்' இருக்கும் வரையில் - பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கும், போர் ஆர்வலர்களுக்கும், அந்நிய சக்திகளுக்கும் - என்றும் கொண்டாட்டம் தான் என்பதே வேதனையான உண்மையாகும்.

# அமெரிக்காவின் போரைக் கண்டித்து யாழ். பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம்!

## புதிய ஜனநாயகக்கட்சி, முஸ்லிம் மக்கள் நடாத்தினர்

அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தத்தைக் கண்டித்துப் புதிய ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தினர்.



நேற்றைய தினம் யாழ்.பஸ்நிலையப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை படத்தில் காணலாம்.
(படம்:எவ்.எக்ஸ்.சுதர்சன்)

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்றுக்காலை 11 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் - 'அமெரிக்கா ஏகாதிபத்தியமே ஈராக் யுத்தத்தை உடன் நிறுத்து', 'எண்ணெய்க்காக ஈராக் மக்களின் இரத்தத்தைக் குடிக்காதே, ஈராக்கை விட்டு வெளியேறு', 'அமெரிக்காவே - ஈராக் மண்ணை விட்டு வெளியேறு', 'புஷ் - பிளேயர் ஆதிக்கக்கூட்டு உலக மக்களின் உரிமைக்கு வேட்டு', 'அமெரிக்க உலகாதிக்க வெறிக்கு உலக மக்கள் பலிக்கடாக்களா' போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் - பேரணியாக அவர்கள் ஆஸ்பத்திரி வீதியூடாகக் கஸ்தூரியார் வீதி வழி சென்று மீண்டும் வைரவர் கோவில் வீதியூடாகப் பஸ் நிலையத்தை அடைந்தனர்.

இறுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேச செயலாளர் கதிர்காமநாதன் உரையாற்றுகையில் - ஈராக் மீதான அமெரிக்காவின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தாக்குதலில் ஈராக்கின் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். ஈராக்கிய மக்கள் சந்திக்கும் அழிவுகளை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது. அமெரிக்கா காட்டுகிற யுத்த வெறியின் மூலம் 3 ஆம் உலக நாடுகளுக்கு மிகவும் அச்சுறுத்தலான காலகட்டத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

இது ஈராக்கிற்கு எதிரான யுத்தமல்ல, உலகத்திற்கே எதிரான யுத்தமென ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து தாயகம் ஆசிரியர் தணிகாசலமும் உரையாற்றினார். (ரா,சு)

# யாழில் புற்றுநோய் வைத்தியசாலை கிராமம்; அரச சார்பற்ற இணையம் தீவிர முயற்சி!

## அடுத்த வெள்ளிக்கிழமை முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்- யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமத்தினை அமைப்பதற்கான பிரேரணைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளது.

நல்லூரிலுள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் - மிகநவீன வசதிகளைக் கொண்ட புற்றுநோய் வைத்தியசாலை வளாகத்தினை உருவாக்குவது பற்றியும், அதற்கான பணத்தினைத் திரட்டி, மேற்படி திட்டத்தினை நிறைவு செய்வது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு காத்திரமான ஆலோசனைகளையும், திட்டங்களையும் வழங்குமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரியுள்ளது.

மேலும், எவராவது தமது முன்திட்ட வரைபுகளைத் தமக்குச் சமர்ப்பிப்பதாயின், முன்னறிவித்தலை வழங்கி அதற்குரிய நேரத்தினை ஒதுக்குவதற்குத் தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கேட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைத் தொடர்ந்து- பல பொதுஅமைப்புக்களின் கோரிக்கையை ஏற்று - யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமத்தினை அமைப்பது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இடம்பெயர்ந்த பொதுமக்களுக்காக படையினர் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்!

## கவலைப்படுகின்றார் லக்ஷ்மன் கதிர்காமர்

(சென்னை)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர், படையினர் மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றனர். வடக்கு- கிழக்கில் அவர்கள் பலமாக இருந்த - முக்கியமான சில தந்திரோபாயம் மிக்க இடங்களிலிருந்து விலகுமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்காக - படையினர் இவ்வாறு செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.



சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் கடமை அரச படைகளுக்கு இருப்பதாகக் கூறப்படும்வேளை - விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் செய்யவும் முடியாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது எப்படிச் சாத்தியமாகும் என்று தெரியவில்லை என்றார்.

இந்தியாவின் சமாதானப் பங்களிப்பைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் -

இன்று இலங்கைப் பிரச்சினையில் பல வெளிநாடுகளும் பங்குபற்றுகின்றன. இவை இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் - இறுதித் தீர்ப்பில் - இந்தியாவின் நிரந்தரமான, சட்டபூர்வமான பங்களிப்பே தேவையாக இருக்கும். இந்தியாவின் பங்கேற்புக்கு - வரலாற்று ரீதியான, புவியியல் ரீதியான காரணங்கள் இருக்கின்றன.

மேற்கு நாடுகள் - இலங்கையில் எதனையும் செய்துவிட்டுப் போகலாம். ஆனால் - இந்தியா அப்படிச் செய்துவிட முடியாது.

இலங்கையின் மிகப்பெரும் அயல்நாடான இந்தியா - இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இலங்கையில் கூட்டாட்சி ஒன்று ஏற்படுத்தப்படுமாயின்- அது அடிப்படையில் இரண்டு நாடுகளையே குறிக்கும். இந்தியா அதனை அனுமதிக்காது. அது இந்தியாவுக்குப் பெரும் பாதிப்பையே கொடுக்கும் - என்றும் கதிர்காமர் தெரிவித்தார்.

# திருப்பியனுப்பப்படுவோருக்கு உதவ யாழ்ப்பாணத்திலும் அலுவலகம்!

## சர்வதேச குடியகல்வு அமைப்பு திறந்தது

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டும் வேறு காரணங்களினாலும் திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கான சர்வதேசக் குடியகல்வு அமைப்பின் கிளை அலுவலகமானது நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படும் மற்றும் தாமாகத் திரும்பும் மக்களுக்கு வேண்டிய தொழில் வாய்ப்புக்கள் மற்றும் அவர்களுக்கான குடியிருப்புக்கள் என்பவற்றுக்கு உதவி வழங்குவதே தமது பணியென அந்நிறுவனத்தின் பணிப்பாளர் பிரௌன்சன் மெக்கன்சி தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து திரும்பும் மக்களின் உண்மைத் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு உதவவும்,

போரிலே ஈடுபட்டு வெளிநாடுகளிலே அரசியல் தஞ்சமடைந்துள்ளவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விரும்பினால் அதற்கு உதவவும் தாம் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அமைப்பின் அலுவலகம் நேற்று நல்லூர் கோவில் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. (சு,ரா)

# ஜோர்ஜ் புஷ் - பிளேயர் போர்த் தந்திரமும் மீளத்துளிர்க்கும் படையெடுப்பு வாதமும்!

பக்தாக் நகரைப் பிடிப்பதற்குக் கூட்டுப்படைகள் தயாராகி வருகின்றனர். இப்பந்தி எழுதிக் கொண்டி



சதாம் - களைப்படைகிறாரா...?

ருக்கும்போது பக்தாக் நகரிலிருந்து 30 மைலுக்கு அப்பால் தமது படைகள் நகர்ந்துவிட்டதாகவும், தரையில் கடும்போர் நிகழ்வதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. தமது படைகள் நகரத்தை அண்மிக்குமளவில் சதாம் ஹுசைன் உயிரியல், இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு எனத் தாம் கருதுவதாக அமெரிக்க இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். பக்தாக் நகர் மீதான சண்டை - மிகப்பெரும் அழிவை நோக்கி நகருகின்றதென்பதே இதன் உள்ளடக்கமாகவுள்ளது. இவ்வாரம் ஈராக் போரினூடாகப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ள படையெடுப்புவாதத்தினையும், போரின் நிலையையும் நோக்குவோம்.

முதலில், ஈராக் மீதான படையெடுப்பு மீளளித்துள்ள புதிய பரிமாணத்தை விரிவாக நோக்குவோம். உலகில் படையெடுப்புக்களும், அழிவுகளும் யதார்த்தமானவையாகவே கடந்த வரலாற்றுக் காலம் முழுவதும் நிகழ்ந்துள்ளன. அவை முழு உலகத்தினையும், மனிதகுலத்தின் மதிப்பினையும் சீரழித்ததாகவே அமைந்திருந்தது. அத்தகைய மனிதகுலத்திற்கு இரண்டாம் உலக யுத்தம் முடிந்த கையோடு - பாதுகாப்பும், தனித்தன்மையும் அளிப்பதற்காகப் பல உலகத் தலைவர்



அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஜனரஞ்சகமான படையெடுப்பு

கள் ஒன்றிணைந்து, பல அமைப்புகளை உருவாக்கினர். பின்னர் - அத்தகைய தலைமைகள் அழிந்தபோதும், அதன் பின்வந்த சில பரம்பரையினரால் அதற்கான ஒழுங்குகளும், சூழலும் பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் - தற்போது மீண்டும் மனிதகுலம் அழிக்கப்படுவதற்கான படையெடுப்புவாதம் - வில்லியம் புஷ்ஷால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தனியே சதாம் ஹுசைனுக்கோ அல்லது ஈராக் மக்களுக்கோ அல்லது இஸ்லாமிய மக்களுக்கோ எதிரான போர் அல்ல. அப்படிக் கணக்குப்போடும் பல புலமையாளர்களும், ஊடகங்களும் எம்மத்தியிலும் காணப்படுகின்றனர். அது எந்தளவுக்கு அபாயமானது என்பது குறுகிய காலத்தில் உணரக்கூடியதாகவே அமைந்துவிடும்.

குறிப்பாக, படையெடுப்புவாதம்- இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பும் நிகழ்ந்தது. சோவியத் யூனியனும், ஐக்கிய அமெரிக்காவும் தமது எதிரிகளை இனங்கண்டு அழிப்பதற்கு அத்தகைய வாதத்தினைப் பயன்படுத்தினர்.

அதில் சோவியத் யூனியன் படுமோசமான தோல்வியை 1989 களில் சந்தித்தது. ஆப்கானிஸ்தான் போரில் ஏற்பட்ட தோல்வியினால் அத்தகைய படையெடுப்புவாதத்தினை அது கைவிட்டது. அவ்வாறே அமெரிக்காவும் - வியட்நாமி

கே.ரி.கணேசலிங்கம்

லிருந்து தனது படைகளைத் தோல்வியுடன் பின்வாங்கியது. ஆனாலும் - பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் - அந்நாடுகளின் ஒப்புதலுடன் படைகளை வைத்திருந்தது. இதனைப் படையெடுப்பு வாதம் என்று கருதமுடியாது.

ஆனால், அண்மையில் ஆப்கானிஸ்தானிலும் - அமைதிகாக்கும் பணியில் பொஸ்னியா, கொசோவே, மசிடோனியா பகுதிகளிலும் அமெரிக்கத் துடுப்புக்கள் நுழைந்துள்ளன. இவற்றையும் ஒருவகையில் படையெடுப்புவாதமாகக் கொள்ளமுடியாது. ஏனெனில், ஆப்கானிஸ்தான் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் அவை பூரணமான ஆதரவு அளித்ததுடன் - பொஸ்னியா, கொசோவே, மசிடோனியா பகுதியிலும் அவ்வாறானதான படை நகர்வே நிகழ்ந்தது.

ஆனால் - ஈராக் மீது தற்போது நிகழும் போர் - திட்டமிட்ட படையெடுப்புவாதம் என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஈராக் படையெடுப்பை உலக மக்கள் எதிர்ப்பதுடன், ஐ.நா.சபையின் ஒப்புதலின்றியே இப்படையெடுப்பு நிகழுகின்றது. போர் ஆரம்பமான பின்பும், மக்களின் எதிர்ப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

எனவே இது உலகத்தினதோ, ஐ.நாவினதோ நிராகரிப்புடன் நிகழ்வதுடன், படையெடுப்பு - தனித்து இரண்டு அரசுகளின் தலைமைகளும், உளவுப்பிரிவும் எடுக்கும் தீர்மானத்துடன் மேற்கொள்ளப்படுவதாகவே காணப்படுகின்றது. எனவே- இதனைப் படையெடுப்புவாதம் என அழைப்பதே பொருத்தப்பாடுடையது.

இத்தகைய படையெடுப்புவாதம்- புதிய பரிமாணத்தை உலகிலுள்ள அரசுகளுக்குக் கொடுத்துள்ளது. பல அரசுகள் தமது எதிரிநாடு மீது தாக்குதலோ, பாரிய போர்களையோ நிகழ்த்த முடியாதநிலை ஐ.நா. சபையினூடாக இதுவரை ஏற்பட்டது. இப்போது புஷ் - பிளயர் கூட்டாக அதனை உடைத்துவிட்டனர். அத்தகைய உடைப்பைப் பயன்படுத்தி இந்தியாவும், ரஷ்யாவும், சீனாவும் உடனடியாகவோ, நீண்டகாலத்திலோ படையெடுப்புவாதத்தினை நிகழ்த்த வாய்ப்பு உண்டு. அது மட்டுமல்ல இதர ஐரோப்பிய அரசுகளும் படையெடுப்பை ஆரம்பிக்கலாம்.

இதில் இந்தியா, ரஷ்யா, சீனாவை ஏன் முதன்மைப்படுத்த முனையப்பட்டது என்றால் - இவ்வரசுகளுக்கே உடனடியான படையெடுப்புக்கேற்ப - எதிரி நாடுகள் அயல் நாடுகளாகக் காணப்படுகின்றன.

இந்தியா, அடுத்த யுத்தம் ஒன்றுக்குத் தயாராவதாகச் சில இரகசிய தகவல்கள் கசிந்துள்ளன.

அதனை - அமெரிக்காவுக்கும், தன் ஈராக் மீதான படையெடுப்புக்கும் தற்போது இந்தியா கொடுக்கும் பதிலடியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். ஒரு பக்கம் - பாதுகாப்பு அமைச்சர், மறுபக்கம் - வெளிவிவகாரத்திற்குரிய அமைச்சர், மற்றும் பிரதமர் ஆகிய மூவருமே அமெரிக்கா - இந்தியாவுக்குப் பாடம் சொல்லத் தேவையில்லையென எச்சரித்துள்ளனர்.

எனவே - பாகிஸ்தான் ஒரு போரைத் தொடக்கினால், இந்தியா




போருக்கெதிரான குரல்கள் எடுபடாமற்போனதா?

பாரிய படையெடுப்பொன்றை சாத்தியப்படுத்தும் என்பதும், பார



நினைத்ததைச் சாதிப்போம் - பிளேயர், புஷ்

தீய ஜனதாவுக்கு அடுத்த தேர்தல் நெருங்குவதும் கவனிக்கப்படவேண்டிய நிகழ்வாகும்.

அவ்வாறே செச்னிய விவகாரம் ரஷ்சியாவுக்கு ஒரு பெரும் தலைவலியாகவுள்ளது. எனவே செச்னியா மட்டுமன்றி - அடுத்த பிரிந்து சென்ற குடியரசுகளை ஒன்றிணைப்பதும் ரஷ்யாவுக்குச் சாத்தியப்படுகிறதோ இல்லையோ, அவசியமானதாக உள்ளது. எனவே படையெடுப்புவாதம் - ரஷ்யர்களுக்கு சாதகமான விளைவுகளை தரவல்லதாக உள்ளது என்றே கருதலாம்.

இவ்வாறே, சீனாவும் - தைவான் பரப்பை இழந்திருப்பதால், அமெரிக்க ஊடுருவலையும், நெருக்கடியையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும், தைவான் - சீனாவுக்குரித்தாகுமாயின், அப்பிரதேசதினை கடந்த அரசியல் போராட்டத்தினைத் தொடக்கிவிடும். இதனால், சீனாவுக்கும் படையெடுப்பு வாதம் சாதகமான விளைவை ஏற்படுத்தும்.

ஏனைய - ஐரோப்பிய அரசுகளுக்கு, மீளவும் கீழைத்தேசப் பொருள் வளத்தைச் சுரண்டுவதற்குப் படையெடுப்புத்தான் பொருத்தமாகக் கருதுமாயின், அதனை சாத்தியப்படுத்துவது அவற்றுக்கு இலாபகரமானவையாகும். ஏனெனில் - குடியேற்றவாதத்திற்கு அமெரிக்காவும் - பிரிட்டனும் புதிய அர்த்தமே கொடுத்து வருகின்றன. ★

# மீண்டும் மணல் விநியோகம் வடமராட்சியில் ஆரம்பமாகியது!

## வளம்பேணல் சங்கம் நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி வளம்பேணல் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மணல் விநியோகம் மீண்டும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, சங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த மண் விநியோகம் கடந்த சில வாரங்களாக மண் அகழ்வதற்கு ஏற்ற இடம் இல்லாமையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் தொடந்து மண் அகழ்வதால் பாதிப்புக்கள் ஏற்படும் என மண்ணியல் ஆய்வாளர்கள் ஆலோசனை வழங்கியதையடுத்து, மணல் ஏற்றும் பணி இடைநிறுத்தப்பட்டு மணல் அகழ்வதற்குப் புதிய இடத்தைத் தெரிவுசெய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அம்பன் பகுதியையண்டிய குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு வசதியான இடம் இருப்பது இனங்காணப்பட்டதையடுத்து, அந்தப்பகுதியில் கடந்த புதன்கிழமை தொடக்கம் மணல் ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதி கரையோரப் பிரதேசமாக அமைந்துள்ளமையால், மணல் ஏற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது. நாளொன்றுக்கு 75 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திர லோட்டு மணல் ஏற்றப்பட்டு வருகிறது.

அதேவேளை, ஏற்கனவே மணல் விநியோகிக்கப்பட்டது போன்று - திங்கள் , செவ்வாய் வடமராட்சிப் பிரதேசத்திற்கும் - புதன்கிழமைகளில் தென்மராட்சிப் பிரதேசத்திற்கும் - வியாழன், வெள்ளி வலிகாமம் மேற்கு மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களுக்கும் மணல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ச)

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டு சிறுபான்மையினருக்கு சாபக்கேடு

## அலிசாகிர் மௌலானா தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டுச்சேர்வது இந்த நாட்டின் சிறுபான்மை இனங்களுக்குச் சாபக்கேடாக அமையும் என்று, பிரதமரின் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா தெரிவித்தார்.

கொள்கை முரண்பாடுகளைக் கொண்ட இரு கட்சிகள் கூட்டுச்சேர்வது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் - தற்போதைய சமாதான முயற்சிகளுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## தவக்கால ஆற்றுகை

(பாஷையூர்)

யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் தவக்கால ஆற்றுகை பலிக்களம் - திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 4 நாட்களுக்கு மாலை 7 மணிக்கு மன்ற அரங்கில் ஆற்றுகை செய்யப்படும்.

(119)

# ஈராக் போர்க்களம்



புகைமண்டலப் பின்னணியில் மற்றொரு களம் நோக்கி நகரும் அமெரிக்காவின் யுத்த டாங்கி.



அதிநவீன லேசர் ஆயுதம் ஒன்றால் குறிபார்த்து ஏவுகணையைச செலுத்த ஆயத்தமாகும் பிரிட்டிஷ் வீரரொருவர்.



பஸ்ரா நகரில் குடிநீருக்கும் பஞ்சம்.



அமெரிக்க நகர்வை ஆதரிக்கும் - குர்திஷ் படைவீரர் ஒருவரின் ரவைக்கூட்டில் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் படம்.

# பக்தாத் விமானநிலையம் அமெரிக்க படையினரிடமா?

## உறுதியான தகவல் இல்லையென செய்தியாளர்கள் தெரிவிப்பு

பக்தாத் விமான நிலையத்தின் பெரும் பகுதியைத் தாம் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கப் படைகள் அறிவித்துள்ளன. எனினும், இச்செய்தி உண்மையானதா என்பது குறித்து அறியமுடியாத நிலை உள்ளது.

பக்தாத் விமான நிலையம் அருகே அமெரிக்கப் படைகளின் பிரசன்னத்தைக் காணவில்லை என, பக்தாத்தில் உள்ள மேற்கத்தைய செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், வடமேல் பக்தாத்தில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூன்று அமெரிக்கப்



தற்கொலைத்தாக்குதல் நடைபெற்ற அமெரிக்கச் சோதனை நிலையம்



பக்தாத் நோக்கி நகரும் அமெரிக்க டாங்கி

படையினர் பலியாகியுள்ளனர். கார் ஒன்றில் சாரதியும் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் வந்தே இத்தாக்குதலை நடத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது பக்தாத்தில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதனிடையே - ஈராக்கியப் படைகள், 14 ட்ரக் வண்டிகளில் பக்தாத் விமான நிலையம் உள்ள பகுதிக்குச் சென்றுகொண்டிருந்ததைத் தாம் கண்டதாக பி.பி.ஸி. செய்தியாளர் கிலகன் தெரிவித்தார். சில ட்ரக் வண்டிகளில் ஆட்லறிகளும் கொணடு செல்லப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் படையினரின் ஆட்லறி தாக்குதலால்

# தூங்காத இரவுகளில் பஸ்ரா வாழ் மக்கள்!

(பக்தாத்)

ஈராக்கின் இரண்டாவது நகரான பஸ்ராமீது, பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்து நடத்தும் ஆட்லறி மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களினால்- இப்பகுதி மக்கள் அச்சத்துடனும், இரவில் உறக்கமின்றியும் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விரக்தி நிலையை அடைந்த சிலர், தமது உயிராபத்தை கருத்திற் கொள்ளாது, வீடுகளைவிட்டு வெளியேறி, போர் நடைபெறும் பகுதிகளூடாக வேறுபகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். இதனால், சிலர் போரினிடையில் சிக்கி இறந்தும், காயமடைந்தும் உள்ளனர்.

உலகவலம்

பிரிட்டிஷ் படைகளின் மிகப் பெரிய ஆட்லறியான- ஏ.எஸ்-90 பஸ்ரா நகரின் மத்திய பகுதியைக் குறிவைத்துத் தாக்கிவருகிறது.



பஸ்ரா நகரைவிட்டுத் தப்பியோடும் குடிமக்கள்

இந்த ஆட்லறியின் குண்டு - புறப்பட்டு சிறிது நேரத்தில் வெடித்து பல சிறிய குண்டுகளாக பல யார் தூரத்துக்குச் சிதறக்கூடியதாகும்.

நகரிற்குள் நுழைந்தால், அதுவே பிரிட்டிஷ் படையினருக்கு மிகப் பெரும் நகர்ப்புற யுத்தமாக மாறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பஸ்ரா அருகே தொடர்ந்து பிரிட்டிஷ் படைகள் மோதல்!

(பஸ்ரா)

பஸ்ரா நகரின் அருகே இரண்டு வார கடும் போரின் பின்னர், இராணுவத்தளம் ஒன்றை பிரிட்டிஷ் படைகள் அமைத்துள்ளன. நகரின் மத்தியிலிருந்து நான்கு மைல் தொலைவில் இத்தளம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்ரா நகரப்பகுதியில் தொடர்ந்தும் கடும் குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருகிறது. சதாம் நீர் தந்தார், நீங்கள் வந்து அதையும் நிறுத்திவிட்டீர்கள் என, ஈராக்கியர் ஒருவர் பிரிட்டிஷ் செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.



கனரக ஆயுதத்துடன் ஈராக்கிய படைவீரன்.

பஸ்ரா நகர் நோக்கி முன்னேற முயன்ற ஜரிஷ் காவற்படையின் படையணியும், இரண்டு பிரிட்டிஷ் சலஞ்சர் டாங்கிகளும் ஈராக்கியப் படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகின.

## பிரிட்டிஷ் வீரர் விபத்தில் பலி!

(பக்தாத்)

ஈராக்கில் பிரிட்டிஷ் இராணுவத்தின் மற்றுமோர் படைவீரர், கவச வாகனம் ஒன்று தடம்புரண்டதில் பலியாகியுள்ளார். லான்ஸ் கோப்ரல் - கார்ல் ஷியரர் என்ற இப்படைவீரர் பயணித்த கவசவாகனம், ஆற்றங்கரை ஒன்றினருகே, தடம்புரண்டு கவிழ்ந்ததில் ஸ்தலத்திலேயே அவர் பலியானார். மற்றுமோர் படைவீரர் படுகாயமடைந்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ் மக்களை அவலவாழ்விற்கு ஆனந்தசங்கரி இட்டுச்செல்கிறார்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விழுமியங்களை அழித்து அதனூடாக சிங்கள தலைமைகளைத் திருப்திப்படுத்தி, அதன்மூலம் உயர் பதவிகளைப் பெறவேண்டும் என்ற கனவில் கடைசிவரை வாழ்ந்துவருபவர் ஆனந்தசங்கரி.

வன்னி இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து இறுதியில் தோற்றுப்போன நிலையிலேயே, கடந்த பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதியாக ஏற்று இவர் போட்டியிட்டார். இவ்வாறு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தேர்தலில் வென்ற ஆனந்தசங்கரி இப்போது உப சபாநாயகர் பதவிக்காகப் பாடுபடுகிறார். கதிரை ஆசையால் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பட்ட இன்னல்களை மறந்து, மீண்டும அவ்வாறானதொரு அவலவாழ்வுக்கு தமிழ்மக்களைத் தள்ள முயற்சி செய்வது விபரீத விளைவுகளையே ஏற்படுத்தும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதத்தினாலும், அவர்கள் பின்னால் அணிவகுத்துள்ள மக்கள் எழுச்சியினாலும் உருவான அரசியல் மாற்றத்தினால், உலக நாடுகளின் இராஜதந்திரிகள் புலிகளுடன் பேச வருகின்றனர். இதைச் சகிக்காத சங்கரி, வெளிநாட்டவர் இப்போது கிளிநொச்சி சென்று பேசுவதாகப் பொங்குகின்றார்.

கடந்த தேர்தலில் - ஆனந்த சங்கரிக்கல்ல, அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு- அதாவது, தமிழரின் ஏக பிரதிநிதிகள் புலிகள், அவர்களுடனேயே பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற வார்த்தைக்காகவே அவருக்கு மக்கள் வாக்களித்தனர். தமிழ் மக்கள் அவரை - தீயசக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக அனுப்பவில்லை. மக்கள் குடியிருப்புக்களிலிருந்து இராணுவம் வெளியேறக்கூடாது என அவர் மறைமுகமாகக் கூறினார். இது எதிர்காலத்தில் யுத்தத்துக்கே வழிவகுக்கும்.

சங்கரியின் இத்தகைய செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர் தனது கூற்றுக்காக மன்னிப்புக் கோரவேண்டும் அல்லது எதிர்காலத்தில் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருமலை முஸ்லிம்களின் அமெரிக்க எதிர்ப்பு பேரணி




ஈராக் மீது அமெரிக்கா-பிரிட்டன் கூட்டாக மேற்கொள்ளும் தாக்குதலைக் கண்டித்து, திருகோணமலையில் இரண்டாயிரம் முஸ்லிம்கள் பகிரங்க தொழுகையிலும் கண்டனப் பேரணியிலும் கலந்து கொண்டனர்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் திருகோணமலை பெரிய முற்றவெளி மைதானத்தில் கூடிய இரண்டாயிரம் முஸ்லிம் மக்கள் பகிரங்கத் தொழுகையில் ஈடுபட்டனர்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் கிண்ணியா, மூதூர், பிரதேசங்களில் முழுஅளவிலான கடையடைப்புப் போராட்டமும் நடைபெற்றது. (04)

## அமெ. தூதுவருடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஷூடன் பேச்சுவார்த்தை ஒன்றை நேற்று மாலை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின் நோக்கம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## பிரதி நிதி அமைச்சர் இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ். வரும் இவர் விரைவில் புனருத்தாரணம் செய்யப்படவிருக்கும் மருதனார்மடம் சந்தையினையும், சங்கானைச் சந்தையினையும் பார்வையிடுவார்.

மருதனார்மடம், சங்கானைச் சந்தைகளைப் புனரமைப்பதற்கான 25 மில்லியன் ரூபாய் பணிகள் பற்றி இந்த விஜயத்தில் ஆராயப்படும்.

இதேவேளை -

இன்று மதியமளவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்களை வர்த்தக சங்கத்திலும், விவசாயிகளை கமநல சேவைகள் நிலையத்திலும் சந்தித்து அமைச்சர் கலந்துரையாடவுள்ளார். (சு)

## பாலியல் சீர்கேடுகளைத் தடுக்க சமூக அமைப்புகளூடு நடவடிக்கை

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் பாலியல் ரீதியான வன்முறைகளிலும், விபசாரச் சீர்கேடுகளிலும் ஈடுபடுவோர் மீது - சமூக அமைப்புக்கள் ஊடாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக - விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

சமூகத்தில் பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் செயல்களும், விபசாரம் போன்ற சீர்கெட்ட நடவடிக்கைகளும் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து - இவற்றினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக - பொது மக்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஊடாக இச்சீர்கேடுகளைக் கட்டுப்படுத்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் -

இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## தேசத்துரோகி அமைச்சர் பீரிஸ் மங்கள சமரவீர அறிவிப்பு!

நாட்டின் துரோகி என்ற குற்றச்சாட்டின்பேரில், விரைவில் ஆட்சியைக் கைப்பற்றவுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் - அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கைதுசெய்யப்படுவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார்மயத் திட்டத்தின் விளைவாக இலங்கைக்கு உதவி வழங்க பல நாடுகள் முன்வந்துள்ளன. வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்கென உதவி கிடைப்பதையிட்டு பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டாது எனவும் அவர் அப்போது குறிப்பிட்டார்.

## மகளிர் உபகுழுவுக்கு...

அரச தரப்பில் - கலாநிதி குமாரி ஜெயவர்த்தன தலைமையில் கலாநிதி தீபிகா, குமுதினி சாமுவேல், பசீலா றியாஸ், வை.எம்.சகாரியா ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது, இக்கூட்டத்தின் அனுசரணையாளராக நோர்வேயைச் சேர்ந்த கலாநிதி அஸ்ரிட் ஹொய்பேக் கலந்து கொண்டார்.

நேற்றைய இக்கூட்டத்தின் போது, மகளிர் உபகுழுவிற்கென செயலகம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், மகளிர் உபகுழுவிற்கென திட்டவரைபுகள் தயாரிப்பது தொடர்பாகவும் இரு தரப்பினராலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சிறுவர் பிரச்சினைகள், மீள்குடியேற்றம் தொடர்பாகவும் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களைப் பராமரிப்பதற்கான இல்லங்கள் அமைப்பது தொடர்பாகவும் மற்றும் மகளிர் தொடர்பான பல விடயங்களும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன.

நேற்றைய இக்கூட்டம், மாலை 7 மணிவரை இரு அமர்வுகளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

இக்கூட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (லி)

## வராகி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பம்

(கொக்குவில்)

ஆனைக்கோட்டை அருள்மிகு வராகி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம், கொடியேற்றத் திருவிழாவுடன் இன்று ஆரம்பமாகின்றது.

## அமெரிக்காவின்...

வழங்கும் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படவில்லை. இதனை விடுதலைப் புலிகள் ஆட்சேபித்திருக்கிறார்கள்.

இலங்கை வட - கிழக்குப் பிரதேசத்தின் புனர்நிர்மாண மீள்கட்டமைப்புப் பற்றி நடத்தப்படும் இந்த மாநாட்டில், விடுலைப்புலிகள் பங்குபற்றுவதற்கு அமெரிக்கா அழைப்பு எதையும் விடுக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது என, விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் முன்முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் பின்னணியில்- இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் புனர்நிர்மாணப் பணிகளில் சமமான பங்களிப்பு செய்வதாக உடன்பாடு காணப்பட்டிருப்பதாகவும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதன் அடிப்படையிலேயே, வட-கிழக்குப் பிரதேசங்களில் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுக்கான உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டமைப்புக்கு அமையவே, அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமபங்காளர்களாகக் கலந்து கொண்டார்கள் என்றும் -

விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழருக்கு......

பார்ப்புக்களைப் பூர்த்திசெய்வதற்கு தென்னிலங்கையில் உள்ள சகல அரசியற்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நீதியான, நிம்மதியான ஒரு அரசியற்தீர்வைப் பெற்றுக்கொடுக்கவும் - தென்னிலங்கையில் உள்ள அரசியற் சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட அழுத்தம் கொடுக்கவும், சர்வதேச ரீதியாகவும் நான் நேரடியாகவே பிரசாரங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்தபோது அவர்களது உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடிந்தது.

ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களில் அக்கறை காட்டினாலும் - புலிகளின் செயற்பாடுகள் சிலவற்றில் அவர் அதிருப்தி அடைந்தவராக இருப்பது தெரியவந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார். சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடையும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

ஆனாலும் - சமாதானம் இன்று முழுமையடைந்துவிட்டதென்று கூற முடியாது. இன்னும் பல கட்டங்களைக் கடந்தாக வேண்டும். பல வெற்றிகளைப் பெற்றாக வேண்டும்.

சர்வதேச ரீதியாக ஆதரவும், அழுத்தமும் அதற்கு மிக அவசியமாகுமென்றும் ஜோன் ஹியூம் தெரிவித்தார். (200)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட
புகுமுக மாணவர்களுக்கான
**வரவேற்பு விருந்துபசாரம்**

வரவேற்பு விருந்துபசார நிகழ்வானது சனிக்கிழமை 05-04-2003 இன்று (காலை 8.00 மணிக்கு) நடைபெறவுள்ளதென்பதனை அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ஏற்பாட்டாளர்கள்,
2 ஆம் வருடம்
கலைப்பீடம்.

(299)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை கனகலிங்கம்

**(ஓய்வு பெற்ற யாழ்.மாநகரசபை பிரதம லிகிதர், முகமாலை)**

முகமாலையைப் பிறப்பிடமாகவும், இல 158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட க.கனகலிங்கம் 04.04.2003 வெள்ளி இறைபதம் அடைந்தார்.

அன்னார், அமரர் திருமதி கமலாம்பிகை அம்மா அவர்களின் அன்புக் கணவரும், சோமசேகரம் (பௌதிகவியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி தி.சோமகலா (யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), சந்திரசேகரம், திருமதி ஜெ.கோமதி, குணசேகரன், தர்மசேகரம் (சேகர்-3ஆம் ஆண்டு உளவியல் சிறப்புக்கலை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இ.திருஞானமூர்த்தி (வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை), ம.ஜெகதீஸ்வரன், திருமதி சோ.வளர்மதி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), திருமதி ச.பிரேமிளா, திருமதி கு.சந்திரா ஆகியோரின் மாமனாரும் பவித்திரன், கலாரூபன், திவ்யா, நர்மதா, அபிஷா, மயூரன், மதுசன், அனிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல 158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள தற்காலிக வதிவிடத்தில் (04.04.2003) நேற்று நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தற்காலிக முகவரி**
*158, பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

**தகவல்-**
க.சோமசேகரம்
(மகன்)

**நிரந்தர முகவரி**
*முகமாலை, எழுதுமட்டுவாள்.*

(300)

### கனகரட்ணம் ரவீந்திரராஜன்

**(குட்டி)**

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ரவி (குட்டி) என அன்பாக அழைக்கப்படும் ரவீந்திரராஜன் 02.04.2003 அன்று காலை கொழும்பில் காலமானார்.

அன்னார், கனகரட்ணம் தவேஸ்வரி தம்பதியரின் அருமை மகனும், வரதராஜன் (ஜேர்மனி), காலம் சென்ற பரதராஜன், மாலினி (ஜேர்மனி), சாந்தக் குவேந்தினி (கனடா), பிரபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுலோசனா (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி), மோகன் (கனடா), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.11, கச்சேரி வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்:-**
வேதநாயகம் (வேதம்),
மாமன்.

(305)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.